**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 161/2019**

**10-06-2022 அ.சா.1 சுப்பிரமணி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை -**

எனக்கு எழுத படிக்க தெரியாது, கையெழுத்து மட்டும் போடுவேன். நிலத்தில் இருந்து என்னுடைய வீடு 1 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனக்கு படிக்க தெரியாது. புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. இரண்டு கண்களுக்கும் Cat hair ஆபரேஷன் செய்துள்ளேன். எனக்கு பார்வை நன்றாக தெரியும். 6- 7 வருடங்களுக்கு முன்பு என் இடது கண்ணில் விபத்து ஏற்பட்டு 6 - 7 மாதங்கள் பார்வை சரியாக தெரியவில்லை. தற்போது நன்றாக தெரிகிறது. எனக்கு வயது 54. என் நிலத்திற்கு அருகில் வீடுகள் எதுவும் கிடையாது. சம்பவ காலத்தில் எனக்கு செல்போன் இருந்தது. சத்தியராஜ் என்னை இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றார். நான் போய் பார்க்கும் போது என் தாயார் கீழே விழுந்து இருந்தாரா என்றால் இல்லை. நான் சென்ற பிறகு தான் அந்த சம்பவமே நடந்தது. 18.6.2017ந் தேதி காலை 8 மணியளவில் எதிரிகள் அனைவரும் எதிரிகளுக்கும், எங்களுக்கும் இருந்த பொது இடத்தில் இருந்த வேப்ப மரத்தை வெட்டிக்கொண்டிருந்தார்கள் என்ற தகவலை என் மகன் சத்தியராஜ் என்னிடம் வந்து சொன்னார் என்ற விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களுடன் வரதராஜ் வந்தார் என்ற விவரத்தை என் புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சென்று பார்த்த போது எதிரிகள் மரத்தை வெட்டிக்கொண்டு இருந்தார்கள் என்ற விவரத்தை என் புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் அவர்கள் சொன்னதின் பேரில் வியாபாரிகள் வெட்டிக்கொண்டு இருந்தார்கள். நாங்கள் போய் தடுத்து நிறுத்தும்போது 2, 3 எதிரிகள் எங்களை அடிக்கும் படியும் என்ன வந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்ற விவரத்தை என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியிருந்த போதிலும் அந்த சங்கதியை என் புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தனசேகர் வெட்டுடா பார்த்துக்கொள்ளலாம் என்று கூறிய விவரத்தை நான் என் புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ராஜசேகர் நடு மண்டையில் அடித்ததாக புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சத்தியமூர்த்தி, சத்தியராஜை தலையில் அடித்ததாக குறிப்பிட்டு புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் அம்மா அடித்தவுடன் மயங்கி கிழே விழுந்து விட்டதாக புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வரதராஜன், வாசுதேவன் வந்து தடுத்தார்கள் என்ற விவரத்தை புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேலும் குப்பன் வந்த விவரத்தை புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிகளுக்கும் கடந்த 20 ஆண்டுகாலமாக விரோதம் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். என் மகன் சத்தியராஜும் நானும் ஊரில் ரவுடி தனம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் ஊரில் எங்களுக்கு நிறையபேரிடம் விரோதம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 20 வருட பகையின் காரணமாக எங்களுக்குள் எந்த வித சண்டையும் ஏற்பட்டதில்லை அதனால் புகாரும் கொடுத்ததில்லை. சொத்து சம்மந்தமாக எந்த சிவில் வழக்கும் எங்களுக்குள் ஏற்படவில்லை. அது சம்மந்தமாக பஞ்சாயத்தும் எங்களுக்குள் ஏற்படவில்லை. என் தாத்தா 2 ஏக்கர் 2 செண்ட் உயிலின் மூலம் எனக்கு எழுதி வைத்துள்ளார். அதன் அடிப்படையில் நான் அந்த நிலத்தை அனுபவித்து வருகிறேன். எதிரிகள் எவ்வளவு நிலம் ஓட்டி அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அவர்களை கேட்டால் தான் தெரியும். எனக்கும் எதிரிகளுக்கும் நிலப்பிரச்சனை இருந்து வருகிறது என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் எதிரிகள் மரத்தை வெட்டிக்கொண்டு இருந்தார்கள் என்று நான் சொன்னது பொய்யா என்றால் எதிரிகள் சொன்னதின் பேரில் வியாபாரிகள் வெட்டிக்கொண்டு இருந்தார்கள். நான் சொன்ற சுமார் 1/4 மணி நேரத்தில் அனைத்து சம்பவங்களும் நடைபெற்று விட்டது. எங்கள் கிராமத்தில் இருந்து வரும் வழியில் தான் வெறையூர் காவல் நிலையம் உள்ளது. எனது இளைய மகன் தினகரன் போன் செய்து 108 ஆம்புலன்ஸ் ஊருக்கு வந்தது. என் தாயாருடன் நானும், என் மகன்கள் சத்தியராஜ் மற்றும் தினகரன் ஆகியோருடன் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். வாளவெட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. எங்கள் கிராமத்தில் இருந்து 3 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அந்த சுகாதார நிலையம் கடலூர் சாலை ஒட்டி மெயின் ரோடில் உள்ளது. அந்த சுகாதார மையத்தில் என் தாயாருக்கு நாங்கள் முதலுதவி அளிக்கவில்லை. மாலை 4 மணிக்கு நான் வெறையூர் காவல் நிலையம் நான் மட்டும் தான் சென்று புகார் கொடுத்தேன். நான் வாய்மொழியாக சொல்லச் சொல்ல போலீசார் புகாரை எழுத அதில் நான் கையெழுத்து போட்டேன். மரத்தை வெட்ட சுமார் 10 பேர் வந்திருந்தார்கள். அவர்கள் வீரபாண்டியை சேர்ந்தவர்கள் ஆனால் பெயர் தெரியாது. எனக்கும், எதிரிகளுக்குமான பொது இடம் என்பது 9 செண்ட் அது கிணறும், கிணறு மேடும். என் பட்டா நிலத்திற்குள் நுழைந்து 9 மரங்களை எதிரிகள் வெட்டி விட்டார்கள். மரங்களை பொது இடத்திலும் மற்றும் என்னுடைய பட்டா இடத்திலும் வெட்டி விட்டார்கள் என்று நான் புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போது எதிரிகள் மரங்கள் எதையும் வெட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் யாரும் மரத்தை வெட்டவில்லை என்றும், எங்கள் தாக்கவில்லை என்றும், அசிங்கமான வார்தைகளால் திட்டவில்லை என்றும், மிரட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. நிலப்பிரச்சனை சம்மந்தமாக எதிரிகளுடன் நாங்கள் பேசுவதில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவத்தன்று ஊரில் எங்கள் மீது விரோதம் கொண்டவர்கள் எங்களை தாக்கினார்கள் என்றும், அவர்களை எங்களுக்கு

அடையாளம் தெரியாததால், அவ்வாறு புகார் கொடுத்தால் வழக்கு ஒன்றும் இல்லாமல் போய் விடும் என்பதால், எதிரிகள் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக எதிரிகள் மீது பொய்யான ஒரு புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் யார் அடித்தார்கள் என்று தெரியாது என்று நான் கூறியதற்கு என்னிடம் யார் விரேதத்தில் உள்ளார்கள் என்று கேட்டு நான் எதிரிகள் பெயரை சொன்னதால் அதன் அடிப்படையில் எதிரிகள் மீது புகார் எழுதிக் கொண்டார்கள். அதன் அடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- சுப்பிரமணி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.